Some improvements have been made in the Mess. Curds are being served on alternate days and Bun and Butter for breakfast, once a week. Besides these, we have two new daily items—Coffee in the evening and appalams, with the night meal. Analysis of the various means of approach to the Mess problems in its practical aspects comes up for discussion. A fishy problem of this type is fish. Though we could not add this item in our menu this year, we defininitely hope to do something about it next year. The mess rate is cheaper here than in some of the other College Hostels in the city. The rate invariably is round about one rupee a day which, definitely, is cheap. On two days in the week we are feeding the N. C. C. lads, for we believe that an army marches on its stomach. The dinners go on as usual. We might have missed the Sundays but not the Sunday Pulav. However, on 30th January, we observed the day on which the Father of the Nation died by foregoing our usual pulav dinner. Both the terminal dinners were very largely attended and we had a great deal of difficulty, as far as the seating arrangements were concerned. I request the authorities to provide more dining tables next year. For our first terminal dinner, we had our Hony. Secy. Mr. M. S. A. Majid, as our chief guest and the second occasion, we had our eminent doctor, Ghani Sahib and we were proud to have on the Hostel Day, Mr. S. Parthasarathi Ayyangar, B.A., M.L., Commissioner of Police, Madras, as chief guest.

Though there was a case of one member having to discontinue his studies because of illness, our young men were generally healthy. 'A sound mind in a sound body,' is our belief. We work as well as play. It is very pleasing to see that every one takes interest in games.

Mr. Naiyamullah Khan, the Games Secy., after recovering from an attack of typhoid, did wonderfully well in organising games and

successfully conducting the tournaments. The new badminton court, which the authorities helped us to erect, has been in constant use. We maintain it neatly. We ourselves do the mowing, whenever necessary, in accordance with the new ideal of national service. Speaking of games, one cannot but mention the fine gesture of our Hostel Secy. who presented a Carrom Board to the Hostel. We take this opportunity to thank him.

Even as our Hostel, the Library has also grown in strength. We have as many as a hundred and nine books in the library, at present. The library, though small, has some very good books. This library has become so popular that the Hony. Secy. of the College and the Principal borrow books, now and then. This is really a great honour. We are grateful to Mr. M. Madurainayagam, Deputy Registrar, Co-operative Societies, for presenting the library with four books. It will not be out of place to mention that such gifts are always welcome. We do not believe entirely in fiction. We are interested in the real happenings of the world too. We have dailies like Swadesa Mitran and the Hindu and Weeklies like, the Illustrated Weekly of India, the Illustrated and the Sport and Pastime. We thank the U.S.I.S. for the magazines they send us every now and then. It is good to see that they remember us and we hope they will continue to do so, especially, when they present books to the various libraries.

Despite all the numerous extra-curricular activities, the studious atmosphere prevailing in the hostel shows that these lads work while they work and play while they play.

It will not be out of place to mention a few outstanding successes achieved by some of the hostel students. Mr. A. H. Yusuf annexed the prize for the best individual speaker in the Inter-University Elocution contest held at Waltair on the 27th January '55. The very same conqueror from Fiji has taken two first prizes for proficiency in Hindi and Modern History. The hostel has made real history. The other History prize, the prize for Indian History, has been knocked off by the 'Baby' of the Hostel, Mr. B. S. Raman. Mr. Nedungilli is a first class Tamil name. No wonder then our Mr. Nedungilli has annexed the first prize in Tamil. The Malayalam first prize went to

Mr. A. Alexander Ninan here. I do not know whether Ninan is a Synonym for the Great or the Magus. We heartily congratulate these gentlemen.

I, for one, will not be surprised, if all the hostel students get through in their examinations and I take this opportunity to wish them all success in the forth-coming examinations and I wish the Seniors, who will be soon leaving the portals of this institution, the best of every thing in the wider arena of life, outside this college.

The Junior students gave the out-going students a farewell party in the second week of March. It was a homely affair and all the students squatted on the Hostel lawn, in the true Indian style. The Warden poured out words of advice in an informal way and invoked the blessings of the Almighty. Mr. Yusuf proposed the toast for the Seniors which was suitably replied to by Mr. C. Subramaniam,, of course, not the Finance Minister of Madras!

I will be failing in my duty, if I do not thank those who have been responsible for the smooth running of the hostel. Two gentlemen stand out very prominently. One is our Principal and Warden but for whose co-operation and guidance we would not have fared half so well. His shrewd but clever and correct judgment has saved us from many a crisis. As for the other, he is none other than our ever-active and helpful Hony. Secretary Mr. M. S. A. Majid, who inspite of other pre-occupations in connection with the College and the Muslim Educational Association of S. India has not once forgotten our Hostel. He has done many things and has promised to do many more for the Hostel. His aim is to make this Hostel a model for the others. My grateful thanks to them both and also to the host of well-wishers of this Hostel.

SIMON I. S. PAKIANATHAN,
Dy. Warden,
The New College Hostel.

OFFICE BEARERS OF THE COLLEGE ASSOCIATIONS 1954-'55.

S. No.	*Name of Association.*	*Vice-President*	*Chairman*	*Secretary.*
1	UNION	Sri A. Gopala Krishna	Mr. S. Kumaraswamy	Mr. Mir Raza Ali
2	SCIENCE	Sri A. Viswanathan	Mr. Alfred Kanagaraj	Mr. Syed Ali Ispahani
3	URDU	Mr. Hamid Hussain Siddique	Mr. Shaik Fazlullah	Mr. Syed Zamin Peeran
4	COMMERCE	Mr. T. Mohamed Dawood Khan	Mr. T. G. Ramachandran	Mr. D. David
5	GEOGRAPHY	Sri S. Manickam	Mr. S. Narayanaswami	Mr. Bashir Khan
6	HINDI	Sri G. Viswanathan	Mr. M. Manoraman	Mr. A. H. Yousuf
7	LOGIC & PSY.	Sri K. R. Applachariar	Mr. R. Ardhanari	Mr. Mohamed Bazlullah
8	ISL. HISTORY	Mr. Abdul Khader Sait	Mr. Md. Rahmathullah	Mr. I. Md. Shamsuddin
9	HISTORY	Mr. Simon I. S. Pakianathan	Mr. D. K. Subramaniam	Mr. G. Rajasekharan
10	MALAYALAM	Sri M. N. Vijayan	Mr. P. S. Thomas	Mr. A. Alexander Nainan
11	TAMIL	Mr. T. K. Gopala Iyer	Mr. Abdullah Shariff	Mr. G. K. Balasundaram

ACTIVITIES OF THE DIFFERENT ASSOCIATIONS, 1954-55.

DATE.	ASSOCIATION.	LECTURER.	SUBJECT.	CHAIRMAN.
12th August '54	UNION	Rev. Dr. A J. Boyd, M.A.D.D.	Inaugural Address	Mr. S. Kumarasamy
17th August '54	SCIENCE	Fr. L. M. Yeddanappalli	do.	Mr. Alfred Kanagaraj
25th August '54	GEOG.	Mr. M. S. A. Majid Sahib B A.	do.	Mr. S. Narayanaswamy
26th August '54	PSYCHOLOGY & LOGIC	Major S. Parthasarathy	Intelligence & its Measurement	Mr. R. Ardhanari
28th August '54	ISL. HISTORY	Al-Haj Anwarul Haq Sahib	Inaugural Address	Md. Rahmathullah
30th August '54	HISTORY	Sri A. S. P. Ayyar, I.C.S.	do.	Mr. D. K. Subramanian
11th Sept. '54	MALAYALAM	Dr. K. M. George	do.	Dr. V. K. John
24th Oct. '54	UNION	Mr. S. J. C. Baynes	U. N. O. DAY	Mr. S. Kumarasamy
27th Oct. '54	UNION	Mr. M. S. A. Majid Sahib, B.A.	Condolence meeting (sad demise of Mr. Rafi Ahmed Kidwai)	
28th Oct. '54	URDU	Mr. S. M. Fazlullah Sahib	Inaugural Address	Mr. Shaik Fazlullah
30th Oct. '54	COMMERCE	Homi F. Kapadia	do.	T. G. Ramachandran
4th Nov. '54	HINDI	Sri Katil Ganapathi Sarma	do.	M. Manoraman

17th Nov.	'54	ISL. HISTORY	Haji M. A. Azeem Sahib	Importance of Meeladi Nabi	S. A. W. Bukhari Sahib
20th Nov.	'54	SCIENCE	Mr. A. G. Narasimhan	Importance of Experiments in Modern Science	Alfred Kanagaraj
23rd Nov.	'54	PSY. & LOGIC	Mr. Syed Sathar Meah	Experimental Psychology	R. Ardhanari
10th Jan.	'55	UNION	Sri V. Thiruvenkatachariar	HUMAN RIGHTS DAY	Mr. S. Kumarasamy
24th Jan.	'55	URDU	Md. Yousuf Sahib, Kokan	The place of Urdu in Modern India	
27th Jan.	'55	HINDI	Sri Dharmarajan		M. Manoraman
29th Jan.	'55	URDU		Hindustani Musical Competition	
2nd Feb.	*'55*	*COMMERCE*	*Sri G. Sethuraman*, M.A.	*Commerce in the present* set-up.	Md. Abdulla Sheriff
14th Feb.	'55	HINDI		Oratorical competition	
17th Feb.	'55	MALAYALAM		Elocution competition	
18th Feb.	'55	UNION	Elocution	The Socialist pattern of Society is preferable to the Communist Pattern.	
5th March	'55	ISL. HISTORY.	Begum Sultan Mir Amiruddin Saheba	The Status of Women in Islam.	Md. Rahmathullah
6th March	'55	UNION	Dr. M. Abdul Haq Sahib	VALEDICTORY ADDRESS	Mr. S. Kumarasamy
7th March	'55	COMMERCE.	Mr. M. S. A. Majid Sahib B.A.	Advice to the out-going II U.C. students.	Mr. Abdullah Sheriff

17

ஆசிரிய ஜோதி

பொன்துகள் கொழிக்கும் காவிரி பாய்தலால் வளம்பெற்ற சோழவள நாட்டில் அவதரித்த வைணவ பக்த திலகமே! தாங்கள் அனுதினமும் திருமாலை ஆழ்வாராதிகளின பாசுரத்தால் ஆடம்பரமின்றி ஆராதித்து வருகிறீர்கள். இராமாயணம், பகவதகீதை முதலியவற்றைப் பிரவசனம் செய்கின்ற பக்தர்களேயும், வேத பாராயணம செய்யும் அந்தணர்களேயும் ஆதரித்து ஊக்குவிக்கின்றீர்கள். திருப்பாவையில் தாங்கள் ஈடுபட்டுள்ளதை நான் நன்கு உணர்வேன்.

"விளையும் பயிர் முளையிலே" என்றதற் கேற்பத் தங்கள் இளமையிலேயே கல்வியில் மேன்மையுற்றிருந்ததை நேரிலே கண்டறிந்துள்ளேனன்றோ! கல்வியிலே உயர்ந்த பட்டமாகிய எம.ஏ. பட்டம பெற்று அறிவியல் கலையில் அதி நிபுணராகி விளங்கி வருகின்றமையை யாவரும் அறிவர்.

ஆசிரிய ஜோதியே!

பாபமில்லாத தொழிலாகிய ஆசிரியத் தொழிலில் ஆவலுடன அமர்ந்து, ஆண்டுகள் தோறும் நூற்றுக் கணக்கான ஆசிரியர்களைத் திறமைபெறச் செய்தீர்கள். ஆலயங்கள் அமைத்தல் முதலிய தருமங்கள் பலவற்றினும் கோடி மடங்கு சிறந்தது ஆங்கோர் ஏழைக்கு அறிவுறுத்தல் என்று பாரதியார் கூறினர். எத்தனையோ ஆயிரம ஆசிரியர்களைப் பயிற்றுவித்த காரணத்தால் கணக்கற்ற மாணவாகள் கல்வியைக் கற்பதற்குத் தாங்கள் உதவி புரிந்திருக்கிறீர்கள். உதவி புரிந்து கொண்டும் வருகிறீர்கள். இவை யாவற்றினும் மேலாகத் தங்களிடத்தில், நல்லகுலம், அருள், தெய்வபக்தி, மேன்மை, கலையில் தெளிவு, கட்டுரை வன்மை, நிலம், மலை, நிறைகோல், மலர் நிகர் மாட்சி முதலிய உத்தம ஆசிரியர்க்குரிய உயர் குணங்கள் யாவும் அமைந்திருக்கின்றன.

சொல்லின் செல்வரே!

தங்களுடைய உயர்ந்த பொருள்பொதிந்த சொற்பொழிவாற்றும திறனையுணர்த்தச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் (Endowment Lectures) சொற்பொழிவாற்றச்செய்து சங்மானித்துக் கௌரவித்துப் பெருமைப் படுத்தியதைத் தவிர வேறு சான்றும் வேண்டுமோ?

உயர் நூலாசிரிய!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தா, தங்கள் அறிவியல் நூற்கு முதற் பரிசு அளித்தார்கள். மடாதிபதிகள் போற்றிப் பணிந்து பொருள் அளித்தார்கள். கலைக் களஞ்சியத்தார் தங்கள் கட்டுரையை விரும்பி வேண்டுகோள் விடுத்தனா. இன்னமும் பல உளநூல்களை இயற்றி வருகிறீர்களே.

உளநூல் புலமையும் தருக்கநூற் புலமையும ஒருங்கே அமைந்த பேராசிரியர் ஸ்ரீமான கே. ஆர். அப்பளாசாரியாரின 60-ஆம் ஆண்டு நிறைவின்று பேராசிரியர் தி. கி. கோபாலையர் அவர்கள் சமர்ப்பித்தது.

உற்றுழியுதவும் பெருமதி அமைச்ச!

புதுக்கல்லூரி யாசிரியர்களுள் பெரும்பகுதியினர், இடுக்கண் ஒன்று உற்றக்கால் விசும்பில் துளியை வேண்டி நிற்கும் பசும் புல்லைப்போலத் தங்கள் ஆதரவை நாடி நிற்பதை நேரில் கண்டறிந்துள்ளேனே!

உத்தம சகோதர்!

"அன்புள்ள முன்னோன் ஒரு பிதா" என்ற ஆன்றோர் வாக்கின்படி தங்கள் தமையனாருக்கு, ஒரு மகன் செய்யவேண்டிய கடமையை யெல்லாம் ஆற்றி அவரது ஆசியைப் பெற்றீர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நாயகமணியாக விளங்கும் தங்கள் இளையோன் இராமாநுஜன் உண்மையிலேயே இராம-அநுஜனாக (லக்ஷ்மணனாக) விளங்குகிறார் அல்லவா? அவருடைய மேன்மைக்கு உதவிபுரிந்தும், அவர் உயர்வைக்கண்டு மகிழ்ந்தும் விளங்கும் பாக்கியம் தங்களை அடைந்திருக்கிறது.

நற்பெருந் தந்தையே!

தந்தை மகற்கு ஆற்றவேண்டிய நன்றியைத் தங்களைப்போலச் செய்தவர்கள் வெகு சிலரே. தங்கள் நன்மக்கள் யாவரும் எந்தச் சபையில் சென்றாலும், எத்தொழில் இயற்றினாலும், அவ்வவற்றில் முந்தியிருக்கும் பாக்கியம் பெற்றுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் விளங்குவதற்கான உதவியைச் செய்துள்ளீர்கள்.

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்பதை யுணர்ந்த தங்கள் புத்திரர்கள் நன்முறையிலே தங்கள் பணியை இயற்றுகிறார்கள்.

அன்பின் அணிகலமே!

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வா யெல்லாம் செயல்" என்ற திருக்குறளைக் கற்ற தாங்கள் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் அன்பைத் தெரிவிக்கிறீர்கள் என்பதனை யெவரும் மறுக்க முடியாது.

இவ்வாறு எல்லா வகையாலும் செய்வனசெய்து அறுபதாம் ஆண்டினை எய்தியுள்ளீர்கள். பயனுடைய வாழ்க்கையை நடத்தியிருக்கிறீர்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்—தெய்வத்துள் வைக்கப் படும்" என்ற வேதவாக்கின்படி,

மானிட வுருக்கொண்ட தெய்வமே!

தங்கள் திருவடியில் முடியினை வைத்து வணங்குகின்றேன். தங்களுக்குப் பல்லாண்டு கூறுகின்றேன்.

இன்னிசை வெண்பா

வாழ்கநம் அப்பளாச் சாரியார் வாழ்கவே
வாழ்க அவர்தம் மனைவியும் மக்களும்
வாழ்க அவர்தம் சுற்றமும் நட்புமே
வாழ்கபல் லாண்டுபல் லாண்டு.

அன்பன்,
தி. கி. கோபாலையர்.

குறள் தரும் இன்பம்

உலகம் புகழும் உத்தமராகிய திருவள்ளுவப் பெருந்தகையார், யாத்த தனிப்பெருநூலாம் திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பிரிவினையுடையதாகி, இல்லற துறவற நெறிகளை அறத்துப் பாலிலும், அரசியல் அமைப்புப் பொருளாதார அமைப்புக்களைப் பொருட்பாலிலும் கூறிக் காதலன் காதலியர்களின் உளம் ஒத்த அன்புடைமை, வாழ்க்கை நிலை ஆகிய இன்ப இயல்புகளைக் காமத்துப்பாலிலும், கவினுறப் பேசிச் சென்றுள்ளமையினைப் பலர் அறியாரேனும், சிலரேனும அறிந்திருக்கின்றனர்.

காமத்துப்பால் காதலன் காதலியர் இன்பப் பகுதியினை அடிப்படையாகக் கொண்டு பேசப்படுவதேனும், பொய்யில் புலவராம் செந்நாப் போதார் அந் நிகழ்ச்சிகளை நனிநாகரிக முறையில் நவின்று சென்றிருக்கும் வன்மை எத்தகையவரும் பாராட்டாமல் இருக்க இயலாது. ஏன்? நோய் கொண்டாலும் கொள்ளலாம், நூறு வயதளவும், பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண்கொள்ளல் ஆகதே என்று பெண்கள் சமூகத்தையே பெரிதும் வெறுத்துப் பேசிய துறைமங்கலச்சிவப்பிரகாச சுவாமிகளைப் போன்ற வீரத்துறவியர்களும் பாராட்டியே தீர்வர்.

தெய்வப் புலவராம் திருவள்ளுவர், இன்பக் கொள்கலமான குல் தொடர்ந்த அல்மொழியினைத்தமது தெய்வநூலாம் திருக்குறளில் யாண்டும் அமைத்துக் கூறிற்றிலர் காமத்துப்பாலிலும் இம்மொழி இடம்பெற்றிலது. அற்றாயின், பெருநாவலரின் பெருந்தன்மையினை என்னென்பது? அம்மொழியினை அமைத்துக் காமத்துப் பாலினைப்பாடி இராமையினால் இன்பச்சுவைக்கு இழுக்கு நேர்ந்ததோ எனில், அதுதான் இல்லை. அச்சுவை விஞ்சியே விறிட்டுத் தோன்றியுள்ளது. இனி அச்சுவையினை இனிதின் நுகர்வோமாக.

பண்புமிக்க தலைமகன் பொருள் காரணமாகவோ, தூதுகாரணமாகவோ; ஓதற் காரணமாகவோ, மற்றும் பல காரணங்களாலோ, சில நாட்கள் தன் உள்ளத்திற்கு இயைந்த தலைமகளைத் தணந்திருக்க நேரிடு

கிறது. அது சமயம், தன் பிரிவினை மெல்ல தன் தலைவிக்குக் கூறுகிறான். இவ்வாறு தன் கணவன் பிரிவினைக் கேட்ட தலைவி, அதுபோது எம்முறையில் தனது கருத்தைத் தன் காதலனுக்கு அறிவித்தனள் என்பதைத் திருவள்ளுவர் கூறியிருக்கும் முறையினைக் காண்க.

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை

என்பது தலைவியின் விடை.

இதன் கருத்து யாது? "அன்ப, நீ என்னிடம் என்னைவிட்டுப் பிரிவதில்லை என்று கூறுவதாயின் கூறுக. நின்றுட் பிரிந்து மீண்டும் வருவன் என்று கூறும் மொழிகளை நீ வரும்வரை உயிருடன் வாழ்பவர் உளராயின் அவர்களிடம உரைக்க" என்பதன்றோ? இதன் உள் பொருள் என்னை? "நீ என்னைத் தணந்தால் உயிருடன் யான் வாழேன்" என்பதன்றோ? இவ்வாறு கூறுவதன் மூலம், தான் சிறிதும் காதலரைப் பிரிந்திருக்க இயலாது என்ற இன்பப்பிணிப்பை எத்துணை நாகரிகமாகத் தலைவி கூறியுள்ளாள் பாருங்கள்! ஈண்டுத்தலைவி கூறியதாகக் கூறிய குறட்பா அன்றோ, சைவ எல்லப்ப நாவலரைத் தாம் பாடிய அருணைக் கலம்பகத்தில்,

ஆரும் விரும்பிய கல்விமேல் ஆசை உமக்குள தாயிடின்
பாருற என்பொரு பாவையா பாடிய பாவலர் போலவே
நீரும்அ ருந்தமிழ செப்பிடும் நீர்மை அறிந்திவண் ஏகுவீர்
மேரு நெடுஞ்சிலை அத்தனர் வீறரு ணபுரி வெற்பரே

என்று அருமையாகப் பாடியமைக்கச் செய்தது? இங்கு இதுபோது குறிப்பிட்ட பாடலின் பொருள், முன்னர்க்காட்டிய குறட்பாவின் பொருளை நல்ல எடுததுக் காட்டுடன் விளககிக் காட்டும் முறையில் அமைந்துள்ளது. அதாவது, "அன்ப, நீ யாரும் விரும்பிய கல்வி காரணமாக என்னைப் பிரிந்தேபோய் மீளவேண்டுமானல், நான் கூறும் கல்வியினையும் கற்றுவருதல் வேண்டும. அதாவது திருஞானசம்பந்தர் இறந்து எலும்பும் சாம்பருமாகக் கிடந்த மாதினைத்தம் அருட்கல்வியின் துணையால் உயிர்பெற்றெழச் செய்தார். அதுபோல உம்பிரிவால் யான் இறந்து, சாம்பரும என்புமாக இருக்கையில், நீ அருட்கல்வி கற்றிருந்தால் என்னையும் உயிருடன் எழுப்பலாம் அன்றோ? ஆகவே, அதனையும் கற்றுவருக" என்பதாம். இத்தகைய உண்மை அன்புமிக்க காதலியைப் பிரிய எவர்க்கேனும் மனம வருமோ?

இத்தகைப் பண்புடைய மாதர் திலகங்கள் மணந்து கொண்ட ஒரு பிறப்பில் மட்டும் தம் கணவன்மார்களைப் பிரிந்திருக்க உளம் கொள்ளார் என்று நாம் எண்ணிவிடுதல் கூடாது. அங்ஙனம் எண்ணப் பெருநாவலர் பெருமானும இடங் கொடுத்திலர்; தம் உள்ளம் உவக்கும முறையில் மணந்த காதலரைப் பிறவிகள்தோறும் பிரிந்திருக்க எண்ணாது சேர்ந்தே வாழ எண்ணமுடையர் ஏந்திழைமார் என்பது வள்ளுவர் கருத்து. இதனை எத்துணை நயம்பட நாயனர் நவில்கின்றூர் பாருங்கள்!

அன்புற்ற இரு தம்பதிகள் இன்பமாகத் தனித்து உரையாடிக் கொண்டிருந்தனர். இவ்வின்பப் பொழுது போக்கில், தலைவன், "கண்ணே! உன்னை யான் சிறிதும் இப்பிறப்பில் பிரியேன்" என்றனன். இப்படித்தன் காதலன் கூறினால், காதலி என் செய்தல் வேண்டும்? தன் மகிழ்வினைக் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? ஆனால், தலைவி ஆனந்தத்திற்குப் பதிலாக அழுகையினை மேற் கொண்டாள். இந்தக் காட்சியினையே வள்ளுவர்,

> "இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக
> கண்நிறை நீர்கொண் டனள்"

என்று கூறினர்.

ஏன் தலைவி ஈண்டு ஆனந்த முறாது, அழுது துன்புற்றனள்? அழுகைதான் அவளது உண்மை அன்பை நமக்கு உரைத்து நிற்கிறது. "அந்தோ இப்பிறப்பில் நம்மைப் பிரியேன் என்றதால் மறு பிறப்பில் நம்மைப் பிரிந்து விடுவார் போலும்!" என்று அவள் எண்ணிய எண்ணமே அவளை அழச் செய்தது என்க.

அன்பு மிக்க அருமைக் காதலர்கள் தமக்குள் உரையாடும் போது, மிகுந்த விழிப்புடன் உரையாட வேண்டும் என்றும் வள்ளுவர் தம் இன்பக் குறள் மூலம் எடுத்துக் காட்டுகிறார். இங்ஙனம் விழிப்புடன் பேசிற்றிலர் எனில், காதலர்கட்கு இடையே ஊடல் ஏற்படும் என்பது உய்த்துணரப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டு ஈண்டே காணலாம்.

பிரிவு காரணமாகப் பிரிந்து சென்ற காதலன், தனது அலுவல்களைத் தடையற முடித்துத் திரும்பி இல்லம் வந்துற்றனன். இல்லாளுடன் இன்பமாக உரையாடிக் கொண்டிருந்தனன். அந்தச் சமயம் தான் தணந்திருந்த போதும தன் காதலியை மறந்திலன என்பதை உணர்த்த 'கண்மணி, நின்னையான் உள்ளினேன்' என்றனன். இதில் என்ன தவறு உள்ளது? ஆனால், தலைவி தன் தலைவன் நின்னையான் உள்ளினேன் என்று கூறியதைத் தவறாகப் பொருள் கொண்டு விட்டனள். அதாவது என்னை மறந்து இருந்து, பின்னர் நினைவு வந்தபோது நினைத்தீர் போலும்! என்பதாகப் பொருள் கொண்டு, தான் கணவனைத் தழுவிக் கொண்டிருந்த கைகளை எடுத்து விட்டு, அவனைப் புல்லாது தூர விலகி ஊடலும் கொண்டனள். இதனையே

> "உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றுஎன்னைப்
> புல்லாள் புலத்தக் கனள்"

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

ஆம், உண்மைக் காதலி ஊடித்தான் தீர்வாள். தலைவன் பிரிந்திருக்கும் காலத்தில் தலைவி அவனைத் தன் உள்ளக் கோயிலில் அமைத்து இடைவிடாது நினைந்த வண்ணமாக இருக்கிறாள். அவன் உள்ளத்தில் இருந்தாலும், உடன் இருந்து கூடிக் குலவாத காரணத்தால் துன்பம் ஏற்பட்டு உடல் மெலிவைக்காட்டும் அல்லவா? இதனை உணர்ந்த தோழி தலைவியின் உடற் சோர்வைப் போக்க, "தலைவி! இப்படி வருத்தம் மேற் கொண்டு உடற் சோர்வுபடுதல் கூடாது. இதோ சூடாகப் பால் கொணர்ந்துள்ளேன். பருகிச் சோகம் தவிர்க." என்று கூறும் போது, தலைவி கூறிய கூற்றாக வள்ளுவர் கூறியுள்ள குறட்பாவினைப் பார்க்கும் போது, நினைத்தேன் என்று தலைமகன் கூறினான் என்ற காலத்துத் தலைமகள் ஊடாமல் என் செய்வாள்? சூடான பாலைப் பருக மறுத்த தலைமகள் என்ன கூறினாள்?

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"

என்று கூறினாள். இதன் பொருள் யாது? "தோழி, என்மாட்டு வைத்த அன்பு காரணமாக, நீ சூடான பால் கொணர்ந்து என்னைப் பருகுமாறு செய்து, என் சோர்வைப் போக்க வழி காண்கின்றாய். ஆனால், நான் சூடான பாலைப் பருக அஞ்சுகின்றேன். 'எற்றுக்கு அஞ்சுகிறாய்?' என நீ வினவலாம். என் உள்ளக் கோவிலில் என் காதலர் குடி கொண்டுள்ளார். நான் இந்தச் சூடான பாலைப் பருகின், என் நெஞ்சில் இருக்கும் அவர் வெந்து போவார் அல்லரோ? ஆகவே, எனக்கு இந்தச் சூடான பால் வேண்டியதன்று." என்று கூறினள். இவ்வாறு இருக்கத் தலைமகன் மட்டும் மறந்து மறந்து தலைவியை நினைத்தல் தவறுதானே?

தமிழ் நாட்டுத் தனிப் பெரும் மாதர்கள் காதலன்பால் தணியா அன்பு கொண்ட அணங்குகள். எதைப் பொறுக்க எண்ணினாலும், தம் கணவன்மார் தம்மைத்தணந்து வேற்று மாதர்பால் செல்வதையோ, இன்னதை செலுத்துவதையோ சிறிதும் பொறுத்துக் கொள்ள ஆற்றல் இல்லாதவர் ஆவர்; தம் கணவர் தம்முடனே இருக்கவே விரும்புபவர்; பிறமாதர்களுடன் தம் கணவன்மார் உள்ளம் போகாதவாறு காதலிமார் பல முறை எச்சரிக்கை செய்தும் வந்திருக்கின்றனர். அப்படிச் செய்திருக்கின்றனர் என்பதை அழகுற நம் வள்ளுவர் அறிவித்துள்ளார்.

உள்ளம் ஒத்த காதலர்கள் காற்றின்பத்தைக் கலந்து துய்க்க ஒரு சோலைக்குள் சென்றனர். சென்றவர் சிறிது நேரம் ஒரு மேடையில் அமர்ந்து, உரையாடிய பின், சோலை அழகு காணத் தனித் தனியே பிரிந்து

உலாவச் சென்றனர். அந்தச் சமயம் தலைமகன் சோலையில் காணப்பட்ட மணமலர் சிலவற்றைப் பறித்து, அவற்றைக் கொணர்ந்து வந்து, மேடையில் அமர்ந்திருந்த தன் தலைவியின் கூந்தலில் சூட்டினன். தலைவிக்கு அந்தச்சமயம் கோபம் வந்ததாம். இந்தக் கோபத்திற்குக் காரணம், "ஓகோ, இப்படித்தான், என்னைப் போன்ற மற்றொரு மாதராளுக்கும் சூட்டுவது என்பதை எனக்கு அறிவிக்கச் சூட்டிக் காட்டினிரோ?" என்று தவருக எண்ணம் கொண்டதே ஆகும். அந்தக் குறளே,

> " கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
> காட்டிய சூடினிர் என்று "

என்பது.

இவ்வாருன முறையில் தன் கணவன் வேற்று மாதரிடம் தொடர்புடையான் என்பதை அறிந்தாள் போன்று ஊடிய மற்றொரு மாதின் செயலையும் பாருங்கள்! மனமொத்த காதலர்கள் தனித்து இன்பப்பேச்சில் ஈடுபட்டு உரையாடிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயம் தலைமகனுக்கு தும்மல் வந்தது. தும்பினன். தும்பின் போது வாழ்த்துக் கூறுதல் நம் தமிழர் மரபு. அம்மரபுப்படி தலைவியும் வாழ்த்தினள். அப்படி வாழ்த்தியவள் உடனே மனம் மாறி அழத் தொடங்கினள். பாவம்! தலைமகனுக்கு ஒன்றும் புரியவில்லை, "என்ன இது! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல ஆய் விட்டதே!' என்று எண்ணி, தன் காதலி அழுகதற்குக் காரணம் அறிய வேண்டி, "என் உயிர் அனைய இன்பே! ஏன் அழுகின்றாய்? நான் தும்மினதில் என்ன தவறு?" என்று அன்பு கலந்த மொழிகளால் கேட்டனன். தலைவியும் தான் அழுதமைக்குக் காரணம் கூறுவாளாய், "அன்ப, நீ என்னைத் துவிர்த்து வேறு யாருடனோ உறைந்து வருகின்றாய். அத்தகையாள் நினைவு இப்போது வர, நீ தும்மினை. அன்புடையார் நினைவு வரும்போது, தும்மல் வருதல் இயல்புதானே? ஐயோ, நம் காதலர்க்கு வேற்று மாதரும் ஏற்பட்டு விட்டனரே என்ற துக்கமே என்னை அழச் செய்தது." என்றனளாம். இந்தக் கருத்துடைய குறள் தான்.

> ' வழுத்தினள் தும்மினேன் ஆக அழித்துஅழுதாள்
> யார்உள்ளித் தும்மினீர் என்று '

என்பது.

இதன் பின் தலைமகன் தன் காதலியிடம் தான் அவளைத் தவிர்த்து வேற்று மாதர் எவரிடமும் வேட்கை கொண்டிலன் என்று கூறிச் சமாதானப் படுத்தி இன்புறுகையில், மீண்டும் அவனுக்குத் தும்மல் வரத்

தொடங்கியது. தும்மினால் மீண்டும் தலைவி பிணக்கம் கொள்ளக் கூடுமே, மீண்டும் சமாதானம் கூற வேண்டுமே, என்று எண்ணிய தலைமகன் வந்த தும்மலை எப்படியோ வர ஒட்டாமல் தடுத்து விட்டனன். அப்படித் தடுத்த போதும் தலைமகள் அவனை விட்டிலள். "ஓகோ உனக்கு வந்த தும்மலைத் தும்முதல் செய்யாமல், எனக்கு உன் நடத்தை உறுதிப் படாதிருக்க வேண்டும் என்பதற்காக அடக்கி விட்டனை போலும்! என் உள்ளதை மறைக்கின்றனை!" என்று கூறி அழுதாள் என்பதை,

> " தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
> எம்மை மறைத்திரோ என்று"

என்ற குறள் அறிவித்து நிற்கிறது.

மற்றொரு காதலர் காட்சியினையும் காண்க. ஒரு காதலனுக்குத் தன் காதலியிடம் கொண்டிருந்த காதல் அன்பு அளவு கடந்து சென்றது. அதனைத் தலைவிக்கு எப்படிக் காட்டுவது என்று சிந்தித்தான். சிந்தித்தவன் அவள் அருகு சென்று, "அமுதம் அனைய என் ஆருயிர் மருந்தே! நான் பிறரிடம் கொண்டிருக்கும் அன்பைக் காட்டிலும், உன்னிடம கொண்ட அன்பு சாலச் சிறந்தது" என்றனன். அவ்வளவு தான். தலைவிக்கு வந்தது கோபம். பக்கத்தில் அமர்ந்திருந்தவள் தூர விலகி அமர்ந்து கொண்டனள். அமர்ந்தவள் சும்மாவும் இருந்திலள், 'பிறரிடம் கொண்டிருக்கும் அன்பைவிட' என்று தன் காதலன் கூறிய தில் உள்ள பிறர் என்னும் சொல்லுக்குப் பிறமாதர் என்று பொருள் கொண்டுவிட்டனள். "ஆகா, நம்மைத் தவிரப் பிறமாதரும் இவருக்கு உண்டா?" என்ற ஊடல் காரணமாக "யாரினும் யாரினும்"! என்று கேட்கலானாள். இவள் கேட்ட வினவையும் அவ்வினவிற்குக் காரண மாகத் தான் நடந்துகொண்ட விதத்தையும் தலைமகன்,

> யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
> யாரினும்? யாரினும்? என்று

கூறி நமக்கு அறிவிக்கிறான்.

இங்ஙனம் எடுத்தவற்றிற் கெல்லாம் நம் தமிழ்நாட்டு மாதர் திலகங் கள் பிணக்கங் கொண்டதாக வள்ளுவனார் எடுத்துக் காட்டுகின்றார் எனில், அதன் உள்ளுறைப் பொருள் யாது என்பதைச் சிறிது ஆழ அழுந்தச் சிந்தித்தால், நம் நாட்டு மாதர் தம் கற்பினை மட்டும் காத்துக் கொள்ள விரும்பாமல் தம் கணவன்மார் ஒழுக்கமும் கெடாது கவனித்து வந்துள்ளார் என்ற உண்மை உணரக் கிடைக்கின்றது. இதனால், இம்

தென்த் தடை செய்தமைக்குக் காரணம்" என்பதை அல்லவா? இவ்வளவு பொருள் அமைய வேதநாயகம் பிள்ளைபாடினமைக்கு ஆதாரம் யாது? இப்படிப் பாடுதற்கு ஆதாரம் நம் வள்ளுவர் பாடிய காமத்துப்பாலேயாகும். அப்பாலின் சுவையைப்பன்முறை படித்துச்சுவைத்துக் குறள் தரும் இன்பத்தில் திளைப்பீராக. தமிழ்நாட்டு மாதர்களின் கற்பினை எண்ணி எண்ணிக்களிப்பீராக.

வித்துவான், பாலூர்
கண்ணப்ப முதலியார்

மண்டபம் பேசியது!

ஒருநாள், அந்திமயங்கும் நேரத்தில், ஊருக்கு ஒருபுறமான சத்திரமொன்றில் மழைக்காகப்பலபேர் ஒதுங்கினர். இடியும் மின்னலும் மாறி மாறித் தங்கள் வன்மையைக்காட்டின. சுழல்காற்று சுழன்று வீசியது. ஒதுங்கிய அனைவரும் காற்று பலக்கவே உள்ளே சென்று குழுமினர். இவ்விதம் அனைவரும் பல விஷயங்களைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கையில் ஒருவர், "பாரதியார், இதுமாதிரிதான் புயலையும் மழையையும் கண்டு பல பாடல்கள் எழுதியுள்ளார்" என்றார். இவ்விதமாகப் பாரதியாரைப்பற்றிய சர்ச்சை அவருடைய கட்சி என்ன என்பதுவரை சென்றது.

ஒருவர், நண்பர்களே! நன்றுகக்கேளுங்கள் "பாரதி சொல்வதை; முப்பது கோடி ஜனங்களின் சங்கமுழுமைக்கும் 'பொது உடமை' ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை" என்று கூறுகிறார். பொதுவுடமை என்பது கம்யூனிஸத்தைத்தானே குறிக்கிறது? உலகுக்குப் புதுமை மிக்க நாடாகத்திகழ்வது ருஷியாதானே? ஆதலின், அவர் கட்டாயம் ஒருகம்யூனிஸ்டு தோழர் என்பதில் ஐயமில்லை என்று கூறி முடித்தார்.

அடுத்தவர் எழுந்தார் சினத்தோடே "என்னையா சொன்னீர்? யாரிடத்தே பேசுகின்றீர்? "பாம்புத்தலைமேலே நடனஞ்செய்யும் பாதத்தினைப் புகழ்வோம்; மாம்பழவாயினிலே குழலிசை வண்மைபுகழ்ந்திடுவோம். ஓம் சக்தி! ஓ சக்தி! ஓம்; பராசக்தி ஓம் சக்தி சக்தி ஓம்! என்றும், "ஞான குரு தேசிகனைப்போற்றுகின்றேன், நாடனைத்துந்தானுவான நலிவிலாதான்" எனவும் பாடியிருப்பதால் அவர் எங்கள் ஆதீன கர்த்தரின் அடியார் கூட்டத்திலொருவர்" என்று அறைந்தார்.

மற்றொருவர் எழுந்தார்; தெவ்வரைப்போலவெகுண்டு தெறலொடு சுற்றிப்பார்த்து, "நண்பர்களே! தோழருரைத்தவை எலாம் தொடர்ந்து நீர் கேட்டுவிட்டீர். அவர் மேற்கூறிய இருபிரிவினருமல்லர். ஏனெனில், "பார்ப்பானை ஐயரென்ற காலமும்போச்சே" என்றும், 'வேதியராயினும் ஒன்றே, அன்றி வேறுகுலத்தவராயினுமொன்றே யென்றும், "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் வாழியபாரத மணித்திருநாடு" என்றும் கூறுதலால், கன்னித்தமிழணங்கின் 'கருப்புக்கட்சியவர்' என அஞ்சாது அடித்து என்றும்இன்றும் ஆணையிடுவேன்" என்று பேசி ஓர் ஆர்ப்பாட்டமே செய்துவிட்டார். இவர் பெரியார்வழிவந்த தளபதிகூட்டத்தொருவர் என்பது சொல்லத்தேவையில்லை. சுற்றும் முற்றும் கம்பீரமாய்ப் பார்த்து அமர்ந்தார் அவ் அன்பர்.

உடனே சிறியெழுந்தார் ஒரு 'சிற்றுளியார் (தொழிலாளி). "பெரியோர் களே! நான் மொழிவதைச்சற்றே செவிமடுங்கள். "உழவுக்கும் தொழிலுக் கும் வந்தனை செய்வோம்; வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்." என்றும், 'தனியொருவனுக்குணவிலையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்' என்றும் 'இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவீரே; யந்திரங்கள் வகுத்திடுவீரே". என்றெலாம் பாடியுள்ளதால் எல்லோருமோர் குலம் எல்லோரு மோரினம் எல்லோருமிந்திய மக்கள்" என்றும் கூறுவதால் அவர் ஒரு 'சோஷலிஸ்ட்' வாதி யென்பதில் எவர்க்கும் ஐயப்பாடு எழாது" என்று இசைத்து அமர்ந்தார்.

இவற்றையெல்லாம் கேட்டும் கேளாதுமிருந்த காங்கிரஸ்காரரொருவர், தம்முடைய கட்சியைப் பற்றியும் சில வார்த்தைகளையும் கூறிவைப் போம் கடமைக்கு என எழுந்தார். அப்பொழுது திடுமென ஒரு சப்தம் எழுந்தது அதாவது, "முட்டாள்களே! நான் சொல்வதைச் சிறிது கேட்கிறீர்களா!" என்பது இந்த உரத்த குரலைக் கேட்ட அனைவரும் கலங்கி விட்டனர். குரல் தொடர்ந்தது :—

'நான்தான் மண்டபம் பேசுகின்றேன் (மண்டபம் பேசுமா எங்காவது? ஏன் பேசாது? மக்கள் மடமையில் மூழ்கிக்கிடக்கும் போழ்து மரமும் பேசும் மண்டபமும் பேசும் மைந்தா!) சரி. உன்னுடைய நோக்கம் என்ன! அதுவா. அதுதான் உங்கள் அறியாமை அழிக்க ஆவலுடன் இருப்பதாகும். அறியாமையா! எங்களிடமா! ஆமாம் உண்மைதான். அறிவு இருந்தால்தானே அறிவு இல்லாமை இருக்கும். சரி சரி. கவிஞனைப்பற்றி நீங்கள் பேசினீர்களே! அவன் எவ்வளவோ கட்சிக்கு உரியவன். உலகுக்கே உரியவன். நீங்கள் மட்டும் உரிமை கொண்டாடுகிறீர்களே, அவன் எல் லோர் கட்சியும் ஆவன். நீங்களனைவரும் நயந்துரைத்தவையெல்லாம் எண்ணுதற் குரியவையே; முதிர்ச்சியொடு அறிவு முற்றும் உடையவர்.

கள் சிந்திக்கற்பாலவையே. நாட்டின் நிலையறிந்து நிலைமை மாறும் பச்சோந்தியா கவிஞன்? கன்னியவள் காவிரியின் காதல் மடி தவழ்ந்து தெள்ளத் தெளிந்தோடித் தென்றலிசை பரப்பி, உள்ளத்தில் உவகையினை ஊட்டு கின்ற தமிழணங்கு மூலம், உடுக்க உடையின்றி, உண்டற்குணவின்றிப் படுக்கப் பாயின்றி, பரிவின்றி, வலிவின்றி வறுமையில் வாடுநர்க்கு, வாழவேண்டும், வாழமுடியும் என்ற நம்பிக்கையும் நல்லுணர்வும் நல்கு பவனன்றோ நாவலன்? கவிஞனின் உள்ளமும் உணர்வும் கண்ணாடியும் பளிங்கு மன்றோ! மாந்தரின் மனமே கவிஞன் வாய் வழியே கூரிய தீஞ் சொல் நல்லிசை வடிவாய் வெளிவருகிறது. கவிஞனைக் கட்சியில் புகுத் திட்ட கனவான்களே கவிஞன் கட்சி எது என்று உங்களுக்கு உண்மையில் தெரியுமா? கூறுகிறேன் கேளுங்கள்:

பாட்டும் உரையும் பயின்று துன்பம் துடைக்க வல்ல தூய கவிதை புனைவோரின் கட்சி; உள்ளத்திலெழுகின்ற உணர்ச்சிக்கே நல்லதொரு உருவத்தை அளிக்க ஆற்றலுடையோரின் கட்சி; எங்கும் நிறைந்துள்ள இறைவனின் பொங்கும் எழிலினைக் கல்லினிலே, காவியத்திலே காட்டு கின்ற பல்திறத்துச் சிற்பி களின் பண்பறிவோரின் கட்சி; கற்ற தனால் ஆய பயன் கடவுளையே தொழுதலென்ன முற்றுமுணர்ந்திருந்த முனிவரின்கட்சி; மேலும், சத்திய நெறிகடைப்பிடிப்போரும், அஹிம்சை நெறி போற்றுவோரும், அருள் நெறியில்தான் நின்று அஞ்சாது பணிபுரியும் நல்லோர்களின்கட்சி; அறிவின் கட்சியவன்: அன்பின் கட்சியவன்; வறியர்க்கு வழங்குமொரு வன்மையோரின் கட்சியவன்; வறுமையில் செம்மைகாட்டி இம்மையில் மறுமையடையும் மக்களின் கட்சி யவன்; உலகுக்காக உயிரினையே உருக்கித்தான் உழைத்திடும் உழைப்பாளிகள் உற்றானவன்; உலகினுக்கே உணவளித்து உயிர் காக்கும் உண்மை உழவன் உயிர் நண்பன் அவன். தமிழறிவோரின் கட்சியவன்; வள்ளுவனின் வாய்மையையே வணங்கித்தம் வாழ்க்கை யையே வளமுற நடத்திடும் வண்மையோரின் கட்சி; சிறுவருக்கு நண்பன வன், முதியர்க்கு நெறிகாட்டுபவன்; அவன் அறிஞர் கட்சியாவான்.

கவிஞனுக்குக் கட்சி எது? கவிஞனில்லாத கட்சி எது? அவன் உலகமனைத்துக்கும் பொது; தண்ணறத்தின் தகை சார்ந்த பிரதிநிதி; தராசு முள்ளுக்கு நிலையானதோர் இடமுண்டோ? எவருடனும் ஒன்றி எவருடனும் பிரிந்து நிற்கும் பற்றற்ற ஞானி கவிஞன் பாரதி. கட்சி கட்சி யெனப் பூசலிட்டே பேதம் விளைக்காது, உயர்கவிஞன் உதித்து அணி செய்த தாய்த்திருநாடு வாழ்க! வாழ்க! என ஓர் குரலாய்த் தமிழணங்கின் பல் புகழைப் பரப்பும் உணர்ச்சியொடு பல்லாண்டு கூறிப் பாமாலை சூடின், பூவோடு நாரும் மணம் பெற்றதே போல் கவிஞன் பாவோடு நாமும் நல

முறுவோம்' மண்டபம் முடிந்தது; மழையும் நின்றது; உண்மை தெளிந்தது; கூட்டம் கலேந்தது; அறிவு பிரிந்தது; ஆணவம் அழிந்தது.

"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே"—பாரதி.

வி. ர. கிருஷ்ணன்,
II வகுப்பு.

" மேகவர்ஷிணி "

தென்னாட்டிலே தலையூர் கிராமத்தைப் பற்றிக் கேள்வி யுறாதவர் ஒருவரும் இருக்கமுடியாது. தலையூருக்கு மேற்கே அவ்வூருக்குச் சொந்தமான ஏரி ஒன்று உண்டு பிரதி வருடமும் பருவ மழை பெய்து அந்த ஏரி நிரம்பி விட்டால் தலையூர்க் கிராமத்திற்கு நிகர் தலையூர்தான். மழைக்காலத்திலே ஏரி நிரம்பியிருக்கும்பொழுது அதை ரசிக்க இரு கண்கள்போதா. நான்கு கரைகளின் நடுவே கடலைப் போன்ற நீர்ப்பரப்பைக் கொண்ட அந்த ஏரி புதுத்தண்ணீரின் காரணமாக வண்டல் நிறமாயிருக்கும். அதன் அலைகள் ஒன்றன் மீது ஒன்று நோக்கி முன்னேறிக் கரையில் மோதி கிலப்பாப்புக்குப் பழுது உண்டாக்கும் "சப், சப்" என்ற சப்தம் அங்கிருப்பவரை வரவேற்று முகமன் கூறுவது போல் இருக்கும். அருகேயுள்ள வயல்களில் பயிர்கள் பச்சைக் கம்பளம் விரித்தது போன்று பார்ப்பவரின் மனத்தைக் கொள்ளை கொள்ளும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையுள்ள அந்தக் கிராமத்திலே பரம்பரை பரம்பரையாகச் சங்கீத வித்வான்களை வந்தது சுப்பையா பாகவதர் குடும்பம். அந்தக் குடும்பத்திலே பிறந்த ஒவ்வோர் ஆண் மகனும் பாகவதர் பட்டத்தைப் பரம்பரைச் சொத்தாக அடைந்தான். பாகவதர் பட்டத்தை அடைவதையே பெருமையாகக் கொண்டது அக் குடும்பம். பட்டத்தை வெறும் பட்ட அளவிலே வைத்திருக்காது, பட்டத்திற் கேற்ற படிப்பைப் பெறுவதில் ஊக்கம் காட்டியது அக்குடும்பம். "பட்டினி கிடப்பேன், ஆனால் பட்டத்திற்குப் பங்கம் விளைக்கமாட்டேன்" என்ற விரதம் பூண்டது அக்குடும்பம். அக்குடும்பத்தின் வழி வந்தவர்தாம் நாராயண பாகவதர். பாகவதர் அந்த ஊரிலேயே மதிப்புடன் வாழ்ந்து வந்தவர். பணக்காரரல்லர்; ஆனால், பண்புடையவர். பட்டினி கிடந்தாலும் சங்கீதத்

திற்கு உரு அளிப்பதில் ஊக்கங் கொண்டவர். இக்குணங்களே அவரைக் கௌரவமாக வாழச் செய்தன.

ஆனால், விதி யாரை விட்டது? காலத்தின் லீலா விநோதங்களுக்கு ஆளாகாத வஸ்து இந்த உலகில் ஏது? காமதேனுவாகவும், கற்பக விருக்ஷமாகவும், கடைசியாக அக்ஷயப் பாத்திரமுமாக இருந்த அவ்வூர் வயல்கள், கரடுமுரடான இரண்டடி ஆழப் பிளவுபட்ட மேட்டுப்பாங் கான வரண்ட பூமியைப் போல் காட்சியளித்தன. நெற்பயிரின் நாற்றுக் களுக்கு இடமளித்த அதே வயல் தன் வெடிப்புக்களிடையே பாம்பிற்கும், தவளைக்கும் இடம் அளித்தது. உயிரை ஊட்டக்கூடிய உணவை அளித்த அதே வயல்—உண்ணும் தானியத்தைத் தன்னகத்தே கொண்ட அதே வயல்—ஒரு நிமிஷத்தில் உயிரைக் கொள்ளை கொள்ளக்கூடிய விஷ ஜந் துக்களுக்குத் நாயகமாக விளங்கிற்று. காலத்தின் கோலமோ, அல்லது அக்கிராமத்து மனிதர்கள் பாவத்தின் விளைவோ, அல்லது வருண பகவானின் வஞ்சகச் செயலோ இயற்கை அக்கிராமத்தவரின் உழைப் பிற்குப் பங்கம் விளைத்தது. பருவ மழை பொழியவில்லை. ஒரு வருடமா? அல்லது இரண்டு வருடமா? அப்படியிருந்தாலும் அந்த ஏரித் தண் ணீர் ஈடு கொடுத்துவிடும். ஆனால், தொடர்ந்தாற்போல் ஐந்து வருடங் கள் இயற்கை சோதனை செய்தால், ஏரிதான் என்ன செய்யும்? அல்லது அந்தக் கிராமத்து மனிதர்கள்தாம் என்ன செய்ய முடியும்?

பிரதி வருடமும் மழைக்காலம் ஆரம்பமாகுமுன்பே, ஒவ்வொரு மனி தனும், ஆண், பெண், குழந்தைகள் உள்பட அனைவரும் வானத்தை அண்ணாந்து பார்த்து ஏங்கினர். அவர்கள் இதயத்திலிருந்து எழுந்த பெருமூச்சு நிராசையை வாய்விட்டுக் கூறிற்று.

ஒரு நாளா, இரண்டு நாளா பட்டினி கிடக்க? குன்று குன்றாகக் குவித்து வைக்கப்பட்டிருந்த தானியக் களஞ்சியங்களெல்லாம் அள்ள, அள்ள மூன்றே வருடங்களில் குறைந்துவிட்டன. நான்காம் வருடமும் ஆரம்பமாயிற்று. ஆனால், இயற்கைதான் சதிசெய்யத் துணிந்துவிட் டதே. கிராமத்து மக்கள், குறிப்பாக ஏழைகள் தங்கள் சாமான்களை அடகு வைத்தனர். மீட்க முடியாமல் அரை விலைக்கு விற்றனர். அரை வயிற்றுக்குக் கஞ்சி குடித்து உயிருக்கும், உடலுக்கும் இடையே ஊசலாடினர்.

ஐந்தாம் வருடமும் இதே ரீதியில் கழிந்துவிட்டால்? ஆம், மக்கள் உயிருடன் மடியவேண்டியதுதான். கிராமத்து மக்கள் ஒன்று கூடினர். பஞ்சாயத்துப் பொதுக்கூட்டங்கள் நடந்தன. எங்கும் ஒரே பிரச்னை தண்ணீர்! தண்ணீர்!! தண்ணீர்!!! வாய்ப்பேச்சால் மழையை வர வழைக்க முடியும்? ஒவ்வொருவரும், ஒவ்வோர் அபிப்பிராயம் கூறினர்.

காளியாத்தாளுக்குப் பொங்கல் போட்டால் மழை பொழியுமென்றார் பூசாரி. வருண ஜெபம் செய்தால் மழை பொழியும் என்றார் ஆசாரி. வயது முதிர்ந்த ஒருவரோ கொடும்பாவி கட்டி வீதியில் இழுத்துச் சென்றால் மழை பொழியுமென்று உறுதி கூறினர். ஏதோ பேப்பரில் படித்த ஒரு காளை, “செயற்கை மழை பொழிய வைக்கலாம்” என்றான். அனைவர் கவனமும் அவன் பக்கம் சென்றது. ஆனால், அவனே அதற்கு “ஏரோப்ளேன் வேண்டு” மென்றான். காத்தானும், கோவிந்தனும் ஏரோப்ளேனுக்கு எங்கே போவார்கள். கடைசியாக அக்கூட்டத்தில் தலைமை வகித்த கருப்பண்ணக் கோனுருக்கு ஒரு யுத்தி புலப்பட்டது. அவருக்குச் சங்கீதத்தால் மழையைப் பொழிய வைக்க முடியும் என்ற ஞாபகம் உண்டாயிற்று. ஆம், கடைசியில் ஒரு யுக்தி கண்டு பிடித்தாய்விட்டது. அனைவரும் அங்கீகரித்தனர்.

நாராயண பாகவதர் வீட்டு வாசலில் ஒரே கூட்டம்; ஆரவாரம். வெளியே வந்தார் பாகவதர். “பாகவதர்வாள்” என்றழைத்தார் நாட்டாண்மைக்காரர். “என்ன சமாசாரம், எதற்காக என்னைத்தேடி இத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார் பாகவதர். நாட்டாண்மைக்காரர் “பஞ்சத்தைத் தீர்க்க உங்களால்தான் முடியும்!” என்று பதிலளித்தார்.

“என்னலா”?

“ஆம், நீங்கள் தாம் மேகவர்ஷிணி ராகத்தின் மகிமையால் வானத்தைப் பொழிய வைக்கவேண்டும். “ஆமாம், ஆமாம்”, என்று எழுந்தன அனைவரது குரல்களும்”

பாகவதருக்கு ஒன்றுமே புரியவில்லை. இது என்ன கிராமத்தாரின் சதியா? இல்லை தம போதாத காலமா? ஒருகணம் தம்மால் முடியாது, என்று சொல்ல நினைத்தார். ஆனால், குலம்! கௌரவம்!! பட்டம்!!! இவை மூன்றும் என்ன ஆகும்? பட்டத்திற்கும், சக்திக்குமிடையே அவர் மனம் ஊசலாடியது. பட்டத்தை விட்டுக்கொடுப்பதா? அல்லது ஊரார் அவமதிப்புக்குள்ளாவதா? சே! சே!! அதற்குப்பதில் உயிரையே விட்டுவிடலாமே. என்றெல்லாம் எண்ணினர்.

“என்ன பாகவதர்வாள்” என்ற குரல் அவரை நினைவுலகிற்கு இழுத்து வந்தது. “சரி” என்ற பதில் அவரையும் அறியாமல் அவர் வாயினின்று உதிர்ந்தது.

நாட்டாண்மைக்காரரும் நகர்ந்தார். கூட்டமும் கலைந்தது. ஆனால், பாகவதரின் மனமோ துயரக் கடலில் சஞ்சரித்தது. தம திறமைக்குச் சோதனையா? அல்லது தமக்கே சோதனையா? அவரால் அதற்குப்

காளியாத்தாளுக்குப் பொங்கல் போட்டால் மழை பொழியுமென்றார் பூசாரி. வருண ஜெபம் செய்தால் மழை பொழியும் என்றார் ஆசாரி. வயது முதிர்ந்த ஒருவரோ கொடும்பாவி கட்டி வீதியில் இழுத்துச் சென்றால் மழை பொழியுமென்று உறுதி கூறினார். ஏதோ பேப்பரில் படித்த ஒரு காளை, "செயற்கை மழை பொழிய வைக்கலாம்" என்றான். அனைவர் கவனமும் அவன் பக்கம் சென்றது. ஆனால், அவனே அதற்கு "ஏரோப் ளேன் வேண்டு" மென்றான், காத்தானும், கோவிந்தனும் ஏரோப்ளே னுக்கு எங்கே போவார்கள். கடைசியாக அக்கூட்டத்தில் தலைமை வகித்த கருப்பண்ணக் கோனாருக்கு ஒரு யுத்தி புலப்பட்டது. அவருக்குச் சங்கீதத்தால் மழையைப் பொழிய வைக்க முடியும் என்ற ஞானோதயம் உண்டாயிற்று. ஆம், கடைசியில் ஒரு யுக்தி கண்டு பிடித்தாய்விட்டது. அனைவரும் அங்கீகரித்தனர்.

நாராயண பாகவதர் வீட்டு வாசலில் ஒரே கூட்டம்; ஆரவாரம். வெளியே வந்தார் பாகவதர். "பாகவதர்வாள்" என்றழைத்தார் நாட்டாண்மைக்காரர். "என்ன சமாசாரம், எதற்காக என்னைத்தேடி இத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள்!" என்று கேட்டார் பாகவதர். நாட்டாண்மைக்காரர் "பஞ்சத்தைத் தீர்க்க உங்களால்தான் முடியும்!" என்று புகிலளித்தார்.

என்னலா"?

"ஆம், நீங்கள் தாம் மேகவர்ஷிணி ராகத்தின் மகிமையால் வானத்தைப் பொழிய வைக்கவேண்டும்." "ஆமாம், ஆமாம்", என்று எழுந்தன அனைவாது குரல்களும்"

பாகவதருக்கு ஒன்றுமே புரியவில்லை. இது என்ன கிராமத்தாரின் சதியா! இல்லை தம போதாத காலமா! ஒருகணம் தம்மால் முடியாது, என்று சொல்ல நினைத்தார். ஆனால், குலம்! கௌரவம்!! பட்டம்!!! இவை மூன்றும் என்ன ஆகும்! பட்டத்திற்கும், சக்திக்குமிடையே அவர் மனம் ஊசலாடியது. பட்டத்தை விட்டுக்கொடுப்பதா? அல்லது ஊரார் அவமதிப்புக்குள்ளாவதா? சே! சே!! அதற்குப்பதில் உயிரையோ விட்டுவிடலாமே. என்றெல்லாம் எண்ணினார்.

"என்ன பாகவதர்வாள்" என்ற நாதம் அவரை நினைவுலகிற்கு இழுத்து வந்தது. "சரி" என்ற பதில் அவரையும் அறியாமல் அவர் வாயினின்று உதிர்ந்தது.

நாட்டாண்மைக்காரரும் நகர்ந்தார். கூட்டமும் கலைந்தது. ஆனால், பாகவதரின் மனமோ துயரக் கடலில் சஞ்சரித்தது. தம் திறமைக்குச் சோதனையா! அல்லது தமக்கே சோதனையா! அவரால் அதற்குப்

பதிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அல்லும், பகலும் அதே கவலை அவரை ஆட்டி வைத்தது. தங்கிலை மறந்தார். சதா அவரது மனம் ராகத்தைச் சாதகம் செய்வதிலேயே லயித்தது. பதினைந்து நாட்கள் கடந்தன. ஒரு நாளும் குறிக்கப்பட்டது. அன்று அவ்வூர் வயற்பரப்பில் கூட்டம் கூடிவிட்டது. "பாகவதர் பாடப் போகிறார்; மழைப் பொழியப் போகிறது", என்று யாவரும் பேசிக் கொண்டனர்.

குறித்த நேரத்தில் பாகவதரும் சாதகம் செய்யத் தொடங்கினார். காலம் நகர்ந்துகொண்டே சென்றது. ஆனால், லக்ஷியம் ஈடேறவில்லை. அனைவர் முகத்திலும் ஏமாற்றம் ஒளி வீசிற்று; ராகத்தில் தவறு இருக்கும் என்ற முடிவிற்கு வந்தனர் அனைவரும்.

மேலும் பதினைந்து தினங்கள் அளிக்கப்பட்டன பாகவதருக்கு.

தோல்வியால் வாடிப்போன அவர் மனம் ஆறுதலுக்காக ஏங்கிற்று. ஆறுதலா? அது வெற்றி பெற்றால்தான் கிடைக்கும். அவர் மனம் மறுமுறை வெற்றியை நாடிற்று. வெற்றி, மழை இவை இரண்டும்தாம் அவர் லக்ஷியங்கள். நனவிலும், கனவிலும் அவர் மனம் "வெற்றி, வெற்றி" என்று புலம்பியது. பதினைந்து நாட்களும் கழிந்தன. ஆனால், இம்முறையும் ஏமாற்றமா? ஐயோ! அவரால் இனிச் சகிக்க முடியாது. தோற்றுத் தோற்று உயிருடன் இருப்பதைக் காட்டிலும் உயிரை மாய்த்துக் கொள்வது மேலென நினைத்தார். ஆனால், கிராமம் அவர்பால் இரக்கம் காட்டியது. மீண்டும் மூன்று நாள் தவணை அளிக்கப்பட்டது.

பாகவதர் வீட்டில் அமானுஷ்யமான, அசாதாரண மௌனம் குடிகொண்டது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூசினர். ஆனால், பாகவதரோ ஊண், உரக்கமின்றிச் சாதகம் செய்யலானார். அவர் வாய் ஒரு நிமிடம்கூட ஓய்வு பெறவில்லை. அவர் மூளையோ ராகத்தின் இலக்கணத்தை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தது. மனமோ "வெற்றி, வெற்றி" என்று பைத்திய வெறிகொண்டு கட்டுக்கடங்காமல் கலங்கியது.

ஊரில் சில குடிசைகள் தீப்பற்றிக் கொண்டன. காரணம்? அவர்களின் அஜாக்கிரதையா? இல்லை விஷமிகளின் வேலையா? எதுவும் சொல்வதற்கில்லை. ஆம், காலதேவனின் கொடுமை. ஊரார் கலி முழுகப் போகிறதென்றனர். சப்த சூரியனும் ஒன்றுசேர்ந்து உக்கிரகமாகக் காய்வது போல் தோன்றியது. உஷ்ணம், அக்னி என்ற கூக்குரல் எங்கும் எதிரொலித்தன. மயக்கமுற்றனர் முதியோர். குழந்தைகளோ வாடிவதங்கினர். பெண்களோ கருகிக் காந்திப் போயினர்.

மூன்றும் நாள் மத்தியானம் திடீரென்று வெயிலின் உக்கிரம் குறைந்தது. மாலை பாகவதரின் கடைசி முயற்சி வெற்றி, தோல்வி இரண்டில்

ஒன்று நிச்சயமாக வேண்டும். உயிர் வாழ்வதா? அல்லது இறப்பதா? என்ற கேள்விக்கு முடிவு அன்றுதான் தெரியவேண்டும். கூட்டம் வயல் வெளியில் கூடியது; பாகவதரும் இடத்தை அடைந்தார்.

அன்று அவர் எதிர்பாராதவாறு "ஜில்" லென்று காற்று வீசியது. குறிப்பிட்ட நேரம் நெருங்கியது. குறிப்பிட்ட சுபவேளை நெருங்க நெருங்க வானத்தின் குமுறல் அதிகமாயிற்று. இடியும், மின்னலும், காற்றும் கூடியிருந்தோரைக் கதிகலங்கச் செய்தன.

அந்தச் சுபவேளையும் வந்தது. பாகவதரும் வாயசைக்கத் தொடங்கினர். சிறு தூறல் தொடங்கிற்று. ஒன்று, இரண்டு, மூன்று அன்று பாகவதர் உடம்பின் மீது தூறல் விழவிழ அவர் உற்சாகம் எல்லை மீறியது. "வெற்றி, வெற்றி" என்று ஏங்கிய மனம் வெற்றியைக் கண்டு எக்காளமிட்டது. நேரம் செல்லச்செல்ல அவர் பாட்டின் விறுவிறுப்பு ஏறிற்று. கூடவே மழையின் வேகமும் அதிகரித்தது. சிறுதூறல் பெருமழையாகப் பொழிந்தது. ஆனல், கூட்டம் கலையவில்லை. கிழவர், குமரர், பெண்கள், குழந்தைகள் ஒருவரும் அசையவில்லை. "காணுது கண்ட பொக்கிஷத்தையல்லவா அடைந்துள்ளனர்? மழையின் வேகம் அதிகரித்தது. ஆனல், பாகவதரின் குரல் கம்மத் தொடங்கியது. மழை வேகத்தின் சப்தத்தைக் கிழித்துக்கொண்டு கிளம்பிய அவர் குரல் அடுத்திருந்தவர் காதில்கூட விழவில்லை. ஆனல் அவர் வாய் மாத்திரம் அசைந்து கொண்டிருந்தது, உடல் தள்ளாடியது. ஜனங்கள் விழித்துக் கொண்டனர். ஆனல், பாகவதரின் கரங்கள் கடைசி முறையாகக் குவிந்து அஞ்சலி செய்தது. அதுவே அவர் செய்த கடைசி அஞ்சலியுமாக முடிந்தது.

கூட்டம் கலைந்தது. அவர் தன்னலங்கருதாத் தனி மருந்தாய், ஊரார் போற்றும் உத்தமப் புருஷராய் விளங்கினர். ஆங்கிலம் படித்தவர்கள் இயற்கையின் மாறுதல் என்றனர். ஆனல், வயதில் முதிர்ந்தோர் சங்கீதத்தின் மகிமை என்றனர். எது எவ்வாருயினும் அவர் தன்னுயிர் நீத்துப் பிறவுயிர் காத்த உத்தம வீரராவர். அம்மகானுக்கு "வாழ்க உன் நாமம், வாழ்க உன் தியாகம், என்று அஞ்சலி செய்திடுவோம்" என்று ஊரார் ஆர்ப்பரித்தனர்.

வெங்கட்ரமணி

பொருட்காட்சிச் சாலை

பொருட்காட்சிச் சாலை—ஒரு நாட்டின் பெருமைக்குரிய பழைய பண்டங்களையும், படைக்கலங்களையும், பழக்கப்படுத்தப்பட்ட பலவகைப் பொருள்களையும், ஒன்றாகத் திரட்டி, அவைகளின் ஒளியால் நாட்டில் நலிந்த நாகரிகத்தையும், சிதறிய சரிதையையும் அறிய உதவும் கலங்கரை விளக்கம். அது ஒரு பொழுதுபோக்குச் சாலை மட்டுமன்று. கண்ணுக்கு மட்டுமன்று அங்கு வேலை; அது சிந்தனை தழைக்கும் சோலை; சிந்தனைக்கும் விருந்தளிக்கும் சாலை.

படைக்கலங்கள் பேசுவதில்லை; செப்பேடுகள் வரலாறுகளை வரைவதில்லை. அவைகள் கண்டவர்களைப் பேசச் செய்கின்றன; எழுதச் செய்கின்றன. தம் தோற்றத்தால் நாடு நலிந்தாலும், நாகரிகம் மண்ணுறினும், அவைகளின் சின்னங்கள் சிரழிந்தாலும் அவைகளின் இன்ப நினைவுகள் அழிவதில்லை.

பொருட்காட்சிச் சாலையின் பொருள்கள் இறந்த காலத்தைச் சுட்டிக் காட்டி, நிகழ்காலத்தை உணரச் செய்து, எதிர்காலத்தை ஏற்ற முறையில் அமைக்கத்தக்க திட்டங்களைத் தீட்டிச் செயலில் காட்டும்படி கட்டளை இடுகின்றன.

எந்தப் பொருள் கிடைத்தற்கரியதாயும், பண்டைத் தெய்வ வழிபாட்டையும் சமய வாழ்க்கையையும் தெரிவிப்பதாயும், ஒரு பெரிய சரித்திரத்தை அகத்தடக்கியதாயும் இருக்கிறதோ, அது பொருட்காட்சிச் சாலையில் அடங்கும்.

நாட்டிற்குப் பெருமை அளிக்கும் பொருட்காட்சிச் சாலைகள் உலகின் நாகரிக நாடுகளால் சிறப்புற வைத்துக் காப்பாற்றப்படுகின்றன. அத்தகைய சிறந்த பொருட்காட்சிச் சாலைகளுள் ஒன்றாக விளங்குவது சென்னையிலுள்ளது.

சிறந்த கற்சிற்பங்களும், சிலைகளும், சீன நாட்டுப் பீரங்கிகளும், பழைய மன்னர்களின் பலவகைப் படைக்கலங்களும், வெட்டி எடுக்கப்பட்ட சவப் பெட்டிகளும், தோண்டியெடுக்கப்பட்ட ரோம நாட்டு நாணயங்களும், மிருகங்களின் காப்பாற்றப்பட்ட உருவங்களும், ரவிவர்மாவின் ஓவியங்களும் சென்னைப் பொருட்காட்சிச் சாலையை அழகுபடுத்துகின்றன.

“திராவிடர் யாரப்பா?” என்று கேட்டால், “பாரப்பா” என்று காட்ட ஏற்றவை ‘ஆரப்பா’வும், ‘மொகஞ்சோதரா’வும். மொகஞ்

சாதரோ முத்திரைகளும், ஆரப்பா அணங்குகளின் ஆபரணங்களும், அவர்கள் ஆண்டவனின் உருவமும், கட்டடங்களின் அமைப்பும், நகரத்தின் மாய்ந்த வனப்பும், சதுரக் கேணிகளின் பசப்பும் நம்மையே பேசவைக்கின்றன.

கிறித்து பிறப்பதற்கு முன், புத்தர் பிறக்குமுன் இயற்கையை இறைவனாகக் கொண்டு மக்கள் வாழ்ந்த காலத்தின் நிலையை, மொகஞ்சதரோ ஆராய்ச்சி வெளியிட்டுள்ளது. நாகரிகத் தொட்டிலென மேல் நாட்டார் கூறிய பாபிலோன் அசிரியா எகிப்து முதலியவைகளின் பழமையினும் பழமைவாய்ந்தது மொகஞ்சதரோ. ஆரப்பாவை அறிந்த அறிஞர், தம் கூற்றை மாற்றினர். "நாகரிகத்தின் நலத்தையும், உல்லாச வாழ்க்கையையும் உடையவர்கள் ஆரப்பா மக்கள்" என்று ஹிரந்த சாஸ்திரி என்னும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார் (Ram Varma's Research Institute Bulletin, Vol. 3).

தென்னிந்தியாவிலேயே இது ஒரு பெரும் பொருட்காட்சிச் சாலை என்று கூறலாம். அசோகரின் பழைய சிலாசாசனங்கள் ஐதராபாத்திலுள்ள மாஸ்கி, பால்கிகுண்டு, கரவிர்மட், குக்தி அருகிலுள்ள எற்றகுடி என்னும் இடங்களில் காணப்பட்டன. வட இந்திய கல் வெட்டுக்கள் சுமார் இரண்டாயிரத்துக்கு மேலுள்ளன. மைசூரில் மட்டும் ஒன்பதினாயிரத்துக்கு மேற்பட்ட கல் வெட்டுக்களும், சென்னை மாகிலத்தில் மட்டும் முப்பத்தொன்பதினாயிரத்துக்கு மேற்பட்டும் உள்ளன. இவை யாவும் சரித்திரக் கருவிகள்; புத்த அறநெறியை அறிவிப்பன.

செப்பேடுகளும், கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள பாண்டிய சரித்திரங்களை வரையத் தூண்டுகோலாகத் துணையாக விளங்கின. இவைகள் வேள்விக்குடி, சின்னமனூர் போன்ற இடங்களில் கிடைத்தன. பல்லவர் சரிதையையும் செப்பேடுகள் செப்பியவை தான்.

படைக்கலங்களின் உருவமும் நிறையும் நீளமும் அவைகளை உபயோஇத்த மக்களின் உடல் வலிமையையும், படைக்கலங்களைப் புதிதாகப் படைக்கும் ஆற்றலையும் அறிவிக்கின்றன. இசைக் கருவிகள் மக்கள் மனநிலையை, கலையார்வத்தை, கலையைப் பெருக்கும் முயற்சியின் பயனை எடுத்துக் காட்டுகின்றன.

சிலைகள் சிற்பங்கள் முதலியன அவைகள் ஆக்கப்பட்ட காலத்தின் பழக்க வழக்கங்களையும், ஆடை அணிகளின் அமைப்பையும் தெரிவிக்கின்றன. அஜந்தா சிற்பங்களிலுள்ள 'புலிகேசி பாரசீகத் தானதிபதி

களை வரவேற்கும் காட்சி அவனுடைய ஆட்சியின் மேன்மையையும், சோழர்களின் கோயில்கள் அவர்களுடைய மதப்பற்றையும், தலையற்ற வேலூர்க்கோட்டைச் சிலைகள் முகலாயரின் சிலை வணக்கத்தின் வெறுப்பையும், எல்லோராக் கோயில் முதலாம் கிருஷ்ணரின் மதப்பற்றையும் எல்லோருக்கும் எடுத்தியம்புகின்றன.

நாணயங்கள் இந்தியாவோடு ரோம நாடு கொண்ட உறவினை உலகுக்கு உரைக்கின்றன. வட இந்தியச் சரித்திரங்களுக்கு அவைகள் பெரிதும் பயன் பட்டன. நாணயங்களின் எழுத்துக்களும் சாசனங்களே.

கோயில்களும் கோட்டைகளும் பாதுகாக்கப்பட்ட ஏனைய ஞாபகச் சின்னங்களும் பொருட்காட்சிச் சாலையில் இடம் பெறாத, பெயர்க்க முடியாத, கோட்டைகளும் சரித்திரச் சான்றுகள். இராஜ ராஜனின் தஞ்சைக் கோயில், தாஜ்மஹால், மைசூரில் உள்ள திப்புவின் கோரி, ஆர்காட்டுக் கோட்டை முதலியன மன்னரின் மாண்ட புகழையும், செல்வச் சிறப்பையும், கலை விருப்பத்தையும் காட்டுகின்றன. நாட்டுக்கு நாகரிகம் நல்கிய நலாந்தா, மராட்டியரை ஒன்று சேர்த்த சிவாஜியின் புரந்தர், போதி மரத்தடியிலமர்ந்த முனிவரின் சமயத்தினர் வாழ்ந்த அஜந்தா எல்லோரா முதலியன எல்லோரும் புகழும் பெருமையுடையன.

பழைய ஏட்டுச் சுவடிகளும், கல் வெட்டுக்களும், மட்பாண்டங்களின் மேலுள்ள முத்திரைகளும் காப்பாற்றப்பட வேண்டியன. உலக நாடுகளனைத்திலும் சரித்திரங்கள் உள்ளன. கிரேக்க "ஏரோடோடஸ்" எழுதிய வரலாறும், அலெக்ஸாண்டருக்குப் பின் வந்த மெகஸ்தனீஸ் எழுதிய இண்டிகாவும் இந்தியா பாரசீகம் முதலிய நாடுகளைப் பற்றிக் கூறுகின்றன. இண்டிகாவின் பகுதிகள் 1848-ல் முல்லர் என்பவரால் தொகுக்கப்பட்டன. கி.பி. 140-ல் டாலமி எழுதிய நூல் சின இந்திய துறைமுகங்களைப்பற்றியும், வாணிகத்தைப் பற்றியும் கூறுகிறது. அராபிய பாரசீகப் பிரயாணிகளான குர்தாத்பெ (கி.பி. 845), மசூதி (920), அபூ சையத் (951) எழுதிய குறிப்புக்களும், அபுல் பீடா (1300)-லும் அல்பிரூனி (1930-ல்) எழுதிய நூல்களும் உள்ளதை உள்ளபடி உரைக்கின்றன. கஜினியோடு வந்த அல்பிரூனி இந்தியாவை நன்கு உணர்ந்தவர்.

சீனர்கள் தம் மதத்தைத் தோற்றுவித்த நாட்டைப் புண்ணிய பூமியாகக் கொண்டனர். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பாஹியன் குப்த பரம்பரையையும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் யுவான்-சுவாங் ஹர்ஷன் காலத்தையும், கி.பி. 673 முதல் 685 வரை நலந்தாவில் தங்கி வடமொழி

உணர்ந்த இத்-சிங் என்பவர் புத்தமதக் கொள்கைகளையும் உணர்ந்து எழுதியதோடு மட்டுமல்லாமல் இந்தியச் சுவடிகளையும் எடுத்துக்கொண்டு சென்றனர். யுவான்-சுவாங் நூல்கள் ஜெர்மன், ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. நம் நாட்டில் அழிந்த நூல்களின் மொழிபெயர்ப்புக்கள் சீனாவிலுள்ள பீக்கிங் நகரத்தில் உள்ளன.

கலிங்கத்துப் பரணி, நந்திக் கலம்பகம், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் முதலியன தமிழகத்தின் சரித்திரத்தைத் தெரிவிக்கின்றன. தமிழில் உள்ள மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலியன அரசர்களைப்பற்றிக் கூறுகின்றன; நாட்டு நிலையைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் வாணிகத்தைப் பற்றியும் வரைகின்றன. புறநானூறு இத்தகையதே. திருக்குறள் அறநூல் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

இலங்கையின் 'மகாவமிசம்' இலங்கையின் வரலாறு, அதிலுள்ள அரசரை ஆதாரமாகக் கொண்டு செங்குட்டுவனின் காலத்தையும், சிலப்பதிகாரத்தின் காலத்தையும் உறுதிப்படுத்தினர், ஆராய்ச்சியாளர்.

பொருட்காட்சிச் சாலைகள் முக்காலத்தில் மன்னர்களால் தம் கல்வியார்வத்தைக் காட்டவும், கலையை வளர்க்கவும் அமைக்கப்பட்டன. புத்தக சாலைகள் அவைகளில் அமைக்கப்பட்டன. சரபோஜி மன்னரின் ஏட்டுச் சுவடிகளும், புத்தகங்களும் இதற்கு ஏற்ற ஆதாரம். மைசூர் மன்னர் உலகத்திலேயே அதிகக் "கிராமபோன் ரிகார்டுகளை" வைத்திருப்பவராம். இன்னும், பல குடும்பங்களில் தசரா முதலிய நாட்களில் அக்குடும்பங்களின் 'பரம்பரைச் சொத்து' எனக் கருதப்படும் அணிகளும், படைக்கலங்களும் அடுக்கி வைக்கப்படுகின்றன. இதை ஒரு 'குட்டிப்' பொருட்காட்சிச்சாலை என்று கூறலாம்.

இங்கிலாந்துக்கு லண்டனிலும், அமெரிக்காவுக்கு வாஷிங்டனிலும், ரஷியாவுக்கு லெனின்கிராடிலும் பொருட்காட்சிச்சாலை அமைந்திருப்பது போல, இந்தியாவுக்கு டெல்லியில் பொருட் காட்சிச்சாலை அமைய வேண்டும். டெல்லிக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்க ஆரப்பாக்களை அகழவேண்டிவரும். மண்ணை நீக்கி மொகஞ்சோதாரோக்களை மாநிலத்துக் காட்ட வேண்டிவரும். அதற்கு உழைப்பு மிக அவசியம். அத்தகைய உழைப்பு அரசியலாகும். பல்கலைக்கழகங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தாயகத்தின் பெருமை கண்டு நாம் மட்டுமல்லாது உலகமே பெருவகை எய்தும். நம் நாட்டுப் பண்பாடும் 'எவரெஸ்ட்' ஆகும்.

அப்துல் முனாப்
I வகுப்பு.

தமிழாட்சி

பண்டு தோன்றி இன்றும் இளமை மணம் குன்றாது இருந்துவரும் ஒரு சில மொழிகளில் நம் தமிழ் மொழி தலையாயதாகும். வேறு எம் மொழியினிடத்துமில்லாத பல சிறப் பியல்புகளைப் பெற்றது நம் " அந் தமிலின்பம் ஆர்தரப் புரியும் செந்தமிழ்". இயல், இசை, நாடகம் ஆகிய உறுப்புக்களோடு வேறு எம்-மொழியி னிடத்து மில்லாத பொரு ளிலக் கணங் கொண் டிலங்கும் நம் தாய் மொழி தனிமொழியேயாம். இது வேறு எம்மொழியினின்றும் பிறந்த தன்று என்பதைப் பல அறிஞர்களும் ஒப்பு வர். உயர் தனிச் செம்மொழி என்பதாலும் இதன் உண்மை விளங்கும். மகா வித்துவான் திருவாளர் இரா. இராகவையங்கார் அவர்கள் தா மியற்றிய '**தமிழ் வரலாறு**' எனும் நூலில் பல சரித்திரச் சான்றுகள் காட் டித் தமிழின் தொன்மையையும், அது வேறு எம் மொழியினின்றும் பிறந்த தன்று—இத் தென்னாட்டிலேயேதான் அது தோன்றியது. என்பதையும் தமிழின் தனி நிலையையும் விளக்குவிர்.

........இந்நூல் கீழ், கிழக்கு எனவும், மேல் மேற்கு எனவும் இரு படியாக வழங்கிய பள்ளம், மேடுகளின் பெயர்களையே ஞாயிறு தோன் றும் திசைக்கும், மறையும் திசைக்கும் இட்டன ரென்று துணிய லாகும். அங்ஙனம் இடுதற்கு இத் தமிழர் வதிந்த நிலம் இயல்பாகவே மேல் பக்கம் மேடாகவும்; கீழ்ப்பக்கம் பள்ளமாகவும் இருப்பதே காரண மல்லது வேறு துணிய லாகாது. இங்ஙனம் இவரிட்ட திசைப் பெயர்க் கேற்ப வுள்ள நாடு, வேங்கடம் குமரி ஆயிடைத் தென்னாடே யல்லது வேறு நாடாகா தென்பது பூகோள நூல் வல்லார் அறிவர். ....இவ்வாறு கிழக்கு மேற்கு முறையே பள்ளம் மேடாக வுள்ள நாடு பிறர் கூறிய எந்த நாடும் ஆகாமை நன்று நோக்கிக் கொள்க," என்பது தமிழ் தென்னாட்டில் தோன்றிய மொழி யென்பதற்கு அவர் கூறும் காரணங்களுள் ஒன்றாகும்.

தன்பால் பல அறிவுக் களஞ்சியங்களைப் பெற்றுத் தமிழ் என்றும், தன் இளமை குன்றாது வாழ்ந்து வருகின்றது. "எல்லாப் பொருளு மிதன்பா லுள-இதன்பா லிலாத எப்பொருளு மில்லையால்," என்ற தன் மையிலே, எல்லா மக்களும், எந் நாட்டவரும், எச் சமயத்தாரும் போற் றும் உலக மறையாம் திருக்குறள், ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பி யம், சிலப்பதிகாரம், கற்றறிந்தா ரேத்தும் கலித்தொகை, அகம், புறம், ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல், மனோன்மணீயம் இன்ன பல பெறற்கரும் அறிவுக் களஞ்சியங்களைப் பெற்ற நம் தாய் பல்

---

* தமிழ் வரலாறு-பக்கம் 25.

லாண்டு காலமாகத் தன் இளமை குன்றாது இயங்கி வருகின்றாள் எனின் அவள் சிறப்பு அறிதற்பாலதாம்.

நம் நாட்டிலே பல அரசுகள் தோன்றிப் பல நூற்றாண்டுகளாக ஆண்டு வந்திருக்கின்றன. பல்வேறுபட்ட அரசுகள் இந் நாட்டிலே தங்கள் பண்பு, நாகரிகம், மொழி ஆகியவைகளைப் பரப்பி வந்திருக்கின்றன. என்ற போதிலும், நம் தென்றமிழ்ன் இளமை மணம் குன்றாது இனிமை குறையாது இருந்து வந்துள்ளதெனின் அது தமிழ் தன்னிடத்தே பெற்ற கலைகளைக் காட்டும்.

